நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 363/2025

## P.W.1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சித்தன் |
| தந்தை / கணவர் பெயர் | : | சின்னப்ப கவுண்டர் |
| கிராமம் | : | கிட்டப்பட்டி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 60 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 02–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**
(விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 03.25 PM

1. நானும் எதிரியும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள். ஆனால் உறவினர்கள் அல்ல. பக்கத்து பக்கத்து ஊரைச் சேர்ந்தவர்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் மூன்று ரோடு பிரியும் இடமென்றால் சரிதான். சம்பவயிடத்தில் சம்பவ நேரத்தில்

மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்குமென்றால் அவ்வளவாக இருக்காது. சாதாரணமாக காலை நேரத்தில் அந்த பிரிவு ரோட்டில் மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்குமென்றால் சரிதான்.

2. சம்பவம் நடந்து 2 நாட்கள் கழித்துதான் நான் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்றால் சரியல்ல. மறுநாள் காலையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். நான் சிகிச்சையில் சேர்ந்த அன்றே என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவுசெய்துவிட்டனர். என்னை விசாரிக்கும்போது காலை சுமார் 11 மணியிருக்கும்.

3. என்னுடைய வாகனம் பழைய டிவிஎஸ் 50 வாகனம் என்றால் சரிதான். அந்த வாகனத்திற்கு தகுதிச்சான்றிதழ் காலாவதியாகிவிட்டது என்றால் சரிதான். அந்த வாகனத்திற்கு காப்பீடு செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லையென்றால் சரிதான்.

4. பிரிவு அருகில் கந்தசாமி அட்டை வீட்டுக்கு அருகில் சம்பவத்தின்போது நின்றுக்கொண்டிருந்தேன். என் வாகனத்திற்கு சம்பவத்தின்போது Side stand இல்லையென்றால் சரியல்ல. மேற்படி வாகனத்திற்கு சைடு ஸ்டேண்ட் இல்லாததால் சென்டர் ஸ்டேன்ட் போடும்போது சாலையின் விளிம்பில் நிற்க இயலாமல் தடுமாறி வண்டியுடன் நான் விழுந்தேன். எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் வண்டியில் அமர்ந்து காலை ஊன்றி நின்றுக்கொண்டிருந்தேன்.

5. காவல் துறை விசாரணையில் மறுநாள் சிகிச்சைக்கு சேர்ந்ததாகவும், அன்றுதான் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்ததாகவும்தான் சொல்லியுள்ளேன். மருத்துவமனையில் என்னை விசாரித்து பதிவுசெய்த அ.சா.ஆ.1 வாக்குமூலத்தில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. நான் படிக்கவில்லை.

6. நான் சொன்னவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் நஷ்டஈடு பெறவேண்டும் என்ற எண்ணத்தின் பேரில் தானாக

ஏற்படுத்திக்கொண்ட காயங்களை வைத்து இழப்பீடு பெறுவதற்காக பொய் புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு சம்பவம் நடந்திருந்தால் சம்பவத்தன்றே புகார் அளித்திருப்பேன் என்றாலும் நான்கு நாட்கள் கழித்து காலதாமதமாக புகார் அளித்திருக்கமாட்டேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 03.35 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**